விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 மாசி 17 வியாழக்கிழமை (01.03.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 72

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

ராம்கோ சீமெந்து

## மட்டக்களப்புத் தாக்குதலிலிருந்து அமெரிக்கா பாடம் கற்ற வேண்டும்

### ஜாதிக ஹெல உறுமய அறிக்கை

(கொழும்பு)

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற எறிகணை வீச்சுத் தாக்குதலில் காயமடைந்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் றொபேட் ஓ பிளேக், விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியாகத் தோற்கடிக்க முடியாது என சில நாள்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

எனவே அவர் அத் தாக்குதலின் மூலம் பாடங்களைக் கற்க வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அந்தஅறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, (04 ஆம் பக்கம் பார்க்க)

## நுணாவில் கிழக்கில் நேற்று அதிகாலை இளம் குடும்பஸ்தர் சுட்டுக் கொலை

(யாழ்ப்பாணம்)

கண்டி வீதியில் சாவகச்சேரி நுணாவில் கிழக்கில் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் ஆயுததாரிகளால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் வீட்டில் பின்புறமாக நின்ற இளம் குடும்பஸ்தர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தில் ஒரு குழந்தையின் தந்தையான இராசேந்திரம் இளஞ்செல்வன் (வயது-32) என்ற இளம் குடும்பஸ்தரே சுட்டுக் கொல்லப்பட்டவர் ஆவார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் அவர் உயிரிழந்தார் என விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவம்தொடர்பாக விசாரணைக ளை மேற்கொண்ட சாவகச்சேரி மாவட்ட நீதிவான் (04 ஆம் பக்கம் பார்க்க)

## அதிரடிப் படையினர் மீது மன்னாரில் தாக்குதல்!

### பதில் தாக்குதலில் 3 புலிகள் பலி

(மன்னார்)

வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த தள்ளாடி அதிரடிப் படையினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியதாகத் தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து அதிரடிப் படையினர் பதில் தாக்குதல் நடத்தியதில் மூன்று விடுதலைப்புலிகள் உயிரிழந்ததாகவும் ஊடக மத்திய நிலையம்தெரிவித்தது. அதனையடுத்து நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது ஒரு ரி-56 ரக துப்பாக்கி, ரவைகள் அடங்கிய நான்கு ரவைக் கூடுகள், தொடர்பாடல் கருவி ஒன்று, (04 ஆம் பக்கம் பார்க்க)

# ஒப்பந்தத்தை மாற்றி அமைப்பதன் மூலம் மீண்டும் அமைதியை ஏற்படுத்த முடியாது

## இருப்பதை அமுல்படுத்துவதே சரியான வழி என்கின்றனர் விடுதலைப்புலிகள்



(கிளிநொச்சி)

தமிழ் மக்களினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகப் புரிந்துணர்வு ஒப்பந்தம் உள்ளது. இந்த உடன்பாட்டை திருத்துவது என்பதையோ மாற்றியமைப்பதையோ தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அது மீண்டும் அமைதியை கொண்டு வர வழிகோலும் என்றும் நம்பவில்லை. எவ்வாறாயினும் தற்பொழுதுள்ள உடன்படிக்கையை முழுமையாக அமுல்படுத்துவதே அமைதித் தீர்வுக்குச் சரியானது என தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் அமைதி முயற்சியைத் தொடர வேண்டும்

### ஐ.நா.செயலாளர் வேண்டுகோள்



(கொழும்பு)

விடுதலைப்புலிகளும் அரசாங்கமும் அமைதி முயற்சியை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பாங் கி மூன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் மட்டக்களப்பில் ஹெலி மூலம் இராஜதந்திரிகள் கொண்டு செல்லப்பட்ட போது எறிகணைத் தாக்குதலுக்கு உட்படுத் (04 ஆம் பக்கம் பார்க்க)

## மடுவில் கிளைமோர் நால்வர் படுகாயம்

(மன்னார்)

மன்னாரில் விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதிக்குள் இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் அணியினர் நடத்திய கிளைமோர் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

மடுத் தேவாலயத்திலிருந்து ஆண்டான் குளம் நோக்கிச் சென்று கொண்டிருந்த போது மடுத் (04 ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரியை நோக்கி எறிகணை வீச்சு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பூநகரியை நோக்கி நேற்று அதிகாலை அகோர எறிகணை வீச்சு நடாத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த சில நாள்களாக முகமாலை, நாகர் கோவில், மணலாறு, ஓமந்தை, தள்ளாடி ஆகிய பகுதிகளிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகப் (04 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸார் மீது வவுனியாவில் தாக்குதல்

(வவுனியா)

வவுனியா செட்டிக்குளம் பொலிஸார் மீது நேற்று முன்தினம் இரவு 10.05 மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சிறியரக ஆயுதங்களைக் கொண்டு விடுதலைப்புலிகளினால் இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து பொலிஸாரும் பதில் தாக்குதல் நடத்தியதாக தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (சு)

## சந்தேகத்திற்கிடமான கப்பலொன்று கடற்படையினரால் தாக்கியழிப்பு!

(கொழும்பு)

மாத்தறை தெய்வேந்திரமுனைப் பகுதியிலிருந்து சுமார் 185 கடல் மைல் தொலைவில் நேற்றுக் காலை சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய கப்பலொன்றை கடற்படைப் படகுகள் தாக்கி மூழ்கடித்திருப்பதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக் காலை 6.30 மணியளவில் ரோந்துப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கடற்படைப் படகுகள், கொடிகள் ஏதும் பறக்கவிடப்படாத நிலையில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிக் கொண்டிருந்த கப்பலை அணுகி அதனை சோதனையிடுவதற்காக நிறுத்துமாறு கோரியதெனவும் ஆனாலும் இணங்க மறுத்த அந்தக் கப்பல் தெற்கு நோக்கிச் செல்ல எத்தனித்தது என்றும் கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் பி.டி.கே. தஸநாயக்க தெரிவித்துள்ளார்.


கடற்படையினரின் கட்டளையை மீறி அக் கப்பல் சென்றபோது கடற்படையினர் எச்சரிக்கை வேட்டுக்களைத் தீர்த்துள்ளனர். அதனையடுத்து அக் கப்பலிலிருந்து சிறிய பீரங்கிகள் மூலம் தமது படகுகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்துக் கடற்படையினர் திருப்பித் தாக்கிய போது சந்தேகத்திற்கிடமான கப்பல் பாரிய தொடர்ச்சியான வெடிச்சத்தத்துடன் தீப்பற்றி கடலில் மூழ்கியதாகவும் அவர் தெரிவித்தார்.

இக் கப்பல் (04 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் ஜனாதிபதிக்கும் தொடர்புள்ளது!

### ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது மகிந்த ராஜபக்ஷவுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தமானது தேர்தலின் இறுதி முடிவுகளில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அக் கட்சியின் அமைப்பாளர்கள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கில் மக்களை வாக்களிக்க விடாது தடுத்ததுதான் மகிந்தவின் வெற்றிக்குக் காரணம். கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது மகிந்தவுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இரகசிய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டதாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்த போதும் ஏன் மகிந்தவின் சகோதரர்கள் மௌனமாக (04 ஆம் பக்கம் பார்க்க)

## புல்மோட்டையிலும் படகுகள் தாக்கியழிப்பு

(கொழும்பு)

புல்மோட்டைக் கடற்பரப்பில் நேற்று முன்தினமிரவு கடற்படை, புலிகளின் இரண்டு படகுகளைத் தாம் தாக்கியழித்துள்ளதாகத் தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

புல்மோட்டைக் கடற்பரப்பில் கடற்படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சமயம் சந்தேகத்திற்கிடமான முறையில் 14 படகுகள் வருவதனை அவதானித்து அப் படகுகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாகவும் அதன்போது இரண்டு படகுகள் மூழ்கடிக்கப்பட்டதுடன் மேலும் மூன்று படகுகள் சேதமடைந்துள்ளதாகவும் ஊடக மத்திய நிலையம் தெரிவிக்கின்றது. (சு-3)

# மனித உரிமைகள் மீறப்படுதல் குறித்து அறிவிக்க ஐ.தே.கட்சி வேண்டுகோள்

(கொழும்பு)

நாட்டிற்குள் ஏற்பட்டு வரும் நீதிக்கு முரணான கடத்தல், கப்பல் பெறுதல், காணாமல் போதல், அதிகம் பயத்துடன் நடமாடுதல் உட்பட்ட மனித உரிமை மீறல்கள் இடம்பெற்ற வண்ணமேயுள்ளன.

இவ்வாறான அசம்பாவிதங்கள் உங்களுக்கோ உங்களுக்கு அறிந்தவர்களுக்கோ ஏற்பட்டிருந்தால் அதை ஐக்கிய தேசியக்கட்சிக்கு அறிவிக்குமாறு ஐ.தே.கட்சியின் மனித உரிமைகள், நிவாரண நடவடிக்கைகள் தொடர்பான உதவி செயலாளர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் செய்திக் குறிப்பொன்றை அனுப்பிவைத்துள்ளார். இந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பான தகவல்கள் அறிந்திருப்பின் 011 2507799 என்ற பக்ஸ் இலக்கம் மூலமாக அல்லது doctorjayalath @ yahoo.com என்ற ஈ மெயில் முகவரியூடாகவும் தொடர்பு கொண்டு அறிவிக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

இவ்வாறு கிடைக்கப்பெறும் தகவல்கள் தேசிய, சர்வதேச மனித உரிமைகள் அமைப்பிற்கு அறியப்படுத்தி ஐக்கிய நாடுகள் அமைப்பின் சர்வதேச அரசியல், பொது உரிமைகள் பாதுகாப்பு சரத்தின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஐக்கிய நாடுகள் சபை இலங்கை அரசுடன் கைச்சாத்திட்டுள்ள பொது அரசியல் சரத்தின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளோம் என்று டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன கூறியுள்ளார். (எ-5)

# தொழிற்பயிற்சி நெறி இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

சமூக சேவைகள் அமைச்சின் கீழ் கோப்பாய், சாவகச்சேரி, தெல்லிப்பழை, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலகங்களில் நடாத்தப்பட்டு வரும் தொழில் பயிற்சி நெறிகளின் புதிய பிரிவு இன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக சமூக சேவைகள் அமைச்சின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் கே.தெய்வேந்திரன் தெரிவித்துள்ளார்.

மேசன், மின் இணைப்பு, குழாய் பொருத்தல் மற்றும் அலுமினிய பொருத்துதல் ஆகிய பயிற்சி நெறிகளே இன்று ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஆறு மாத கால இப் பயிற்சி நெறியில் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவாக மாதாந்தம் 4 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (எ-3)

# மருந்துக்கலவையாளர் பரீட்சையில் சித்தியடைந்தோர் விபரம் வெளியானது

யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் பிராந்திய பயிற்சிக்கல்லூரியில் மருந்துக்கலவையாளர் பயிற்சிநெறியில் பங்குபற்றி பரீட்சையில் சித்தியடைந்த 37 மாணவர்களின் விபரம் கொழும்பு சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது. அவர்களின் பெயர் விபரம் மாவட்ட ரீதி யாக வருமாறு;

*யாழ்ப்பாணம்;*

கபிலா கருணாநிதி, நிசாந் தினி தேவராஜா, லக்ஸ்மியா புஸ்பராசன், திருமதி சாந்தினி சிவரூபன், சுகன்யா சுந்தர லிங்கம், தர்மலிங்கம் பிரபாகரன், கந்தசாமி சுதாகரன், பரராஜசிங்கம் கருணாகரன், திருமதி சசிலியா குமாரதாஸ், இளையதம்பி துஸ்யந் தினி, சர்மிளா பொன்னுத்துரை, சண்முக லிங்கம் வினோதன், கோபிகா தட்சணாமூர்த்தி,

கயிலாயபிள்ளை றஜிவ், துளசி யோகநாதன், இராஜதுரை சங்கர், வடிவேற்கரசு முகுந்தன், சிதம்பரநாதன் சுதாகரன் ,சிவசுப்பிரமணியம் சிவகாந்தன், இலகுப்பிள்ளை சிவதாரன், கஸ்தூரி செல்வநாதன், அபிராமி சிவஞானம், இந்திரகுமார் பிரசாந்தி, உவப்பிரதா கணேசபிள்ளை, கங்கரட்ணம் செந்தூரன் , அபிராமி பரராமசிங்கம்,

*கிளிநொச்சி*

குபேந்திரன் உஜிதன், நிஸானி மகாதேவன், திருமதி வஸந்தகுமாரி இராஜேந்திரன்

*வவுனியா*

குமுதா தங்கேஸ்வரன், சதானந்தசர்மா பரணீதரன்

*திருகோணமலை*

கணேசரட்ணம் சந்திரகாஸன்

*மன்னார்*

மனுவல் லாவன்யா, எம்.எக்ஸ்.மிஜிந்த பெர்னான்டோ , ஜேசுதாஸன் றொனி மிராண்டோ, டொறஸ் குரூஸ்

*முல்லைத்தீவு*

கணேசபிள்ளை குகதாஸ். (ச)

# அதிக எண்ணெயுள்ள உணவு வகைகளை சிற்றுண்டிச்சாலையில் விற்கத் தடை

அதிக எண்ணெய். சர்க்கரை, உப்பு அடங்கிய உணவுகள் மற்றும் உருகக் கூடிய ரொபி வகைகள் , இனிப்பு பானங்கள், காபோனிக் அடங்கிய குளிர்பானங்கள் போன்றவற்றை விற்பனை செய்வதற்கு பாடசாலை சிற்றுண்டிச்சாலைகளுக்கு கல்வி அமைச்சு தடை விதித்துள்ளது.

பாடசாலைகளில் நடத்தப்பட்டு வரும் சிற்றுண்டிச் சாலைகள் தொடர்பாக அதிபர்களுக்கு கல்வி அமைச்சினால் சுற்றறிக்கையொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவ் அறிக்கையிலேயே அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, பாடசாலை மாணவர்கள் பல்வேறு போசனை பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதோடு தற்போது அதிகளவான பாடசாலை மாணவர்கள் நீரிழிவு நோய்க்கு ஆட்பட்டு வருகின்றனர்.

சுகாதார ஆராய்ச்சி அறிக்கைகளின்படி பாடசாலை மாணவர்களிடையே போசனைக் குறைபாடு நூற்றுக்கு 21 ஆக காணப்படுவதோடு வயதுக்கு உகந்த உயரம் இன்மை நூற்றுக்கு 15.1 ஆகவும் வயதுக்கு உகந்த எடை இன்மை நூற்றுக்கு 29 ஆகவும் காணப்படுவதென இவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-5)

# ஆசிரிய ஆலோசகர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் ஆங்கிலம் ,சித்திரம் ,முறைசாராக் கல்வி ,தகவல் தொழில்நுட்பம் , ஆரம்பக்கல்வி, கிறிஸ்தவம் , இரண்டாம் மொழி (சிங்களம்) மற்றும் சைவம் ஆகிய பாடங்களுக்குரிய ஆசிரிய ஆலோசகர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுவதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் தெரிவித்தார்.

வெற்றிடங்கள் நிலவும் பாடங்களுக்கு யாழ்.கல்வி வலயத்திலுள்ள இலங்கை ஆசிரியர் சேவை Iஐ சேர்ந்தவர்கள் இவற்றிற்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பதாரிகள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை அதிபரின் சிபாரி சுடன் எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்ன தாக அனுப்பி வைக்கு மாறு அவர் கேட்டுள்ளார். (ச-3)

# அவுஸ்திரேலியாவில் கைதானவர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்ப ஏற்பாடு

(கொழும்பு)

சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா அவுஸ்திரேலியாவின் வெளிவிவகார அமைச்சர் அலக்சாண்டர் டவுனரை நேற்று சந்தித்துள்ளார்.

கிறிஸ்மஸ் தீவுக்கு அருகில் கைது செய்யப்பட்ட இலங்கையரை இலங்கைக்கு திருப்பி அழைக்கும் நோக்கில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இச் சந்திப்பில் சட்டமா அதிபரும் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது. கைது செய்யப்பட்டவர்கள் அகதிகளாக அவுஸ்திரேலியாவுக்கு செல்லவில்லை என கூறிய அமைச்சர் அவுஸ்திரேலியாவிலுள்ள விடுதலைப்புலிகளுக்கு உதவும் நோக்கில் அவர்கள் அங்கு சென்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்காது இருக்க அரசாங்கத்திடம் உறுதி மொழியைப் பெற்றுக்கொள்வதாகவும் அமைச்சர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். (ச-3)

# கப்பலில் எடுத்துவரப்பட்ட சீமெந்து முகவர்களூடாக விநியோகம்

கொழும்பிலிருந்து யாழிற்கு கப்பல் மூலம் சீமெந்து எடுத்துவரப்பட்டு காரைநகர் துறைமுகத்தில் இறக்கப்பட்டு வருவதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்துள்ளார்.

இறக்கப்பட்டு வரும் சீமெந்து யாழ்.முகவர்களுக்கு வழங்கப்பட்டு அவர்கள் ஊடாக பிரதேச செயலகங்களில் பெறும் அனுமதிப்பத்திரத்துக்கு விநியோகிக்கப்படும் எனக் கூறினார்.

மேலும் ஒரு பைக்கற் சீமெந்து ஆயிரத்து 200 ரூபா எனவும் யாழ். நகரிலுள்ள முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அரச அதிபர் தெரிவித்துள்ளார். (ச-5)

# யுத்தநிறுத்த உடன்படிக்கை அரசியலமைப்புக்கு முரணானது

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி செய்து கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கை இலங்கை அரசியலமைப்புக்கும் சட்டத்திற்கும் முரணானது என்பதை சர்வதேச சமூகத்திற்கு முன் கொண்டு செல்ல வேண்டும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

யுத்த நிறுத்த உடன்படிக்கை தொடர்பாக புலிகள் தற்பொழுது கொண்டுள்ள நிலைப்பாடு குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன? கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்னர் புலிகளுடன் செய்து கொள்ளப்பட்ட தேசத்துரோகமான யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு ஐந்து வருடங்கள் நிறைவடைந்ததை முன்னிட்டு பிரிவினவாத புலிகளினால் உண்மையான உருவம் வெளியிடப்பட்டுள்ளது.

இது குறித்து நாட்டு மக்கள் கூடிய அவதானத்துடன் இருக்க வேண்டும் என்றும் அந்த இயக்கம் கேட்டுக் கொண்டுள்ளது. யுத்த நிறுத்த உடன்படிக்கையை ஒரு ஆவணமாக பயன்படுத்தி தனி இராச்சியத்தை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று புலிகள் கூறியிருக்கின்றனர்.

இந்த தேசத்துரோகமான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் நாம் உட்பட தேசத்தின் மீது பற்றுக்கொண்டவர்கள் யுத்த நிறுத்த உடன்படிக்கை குறித்து நாட்டுக்கும் மக்களுக்கும் தெளிவுபடுத்தியிருந்தோம். இந்த உடன்படிக்கைக்கு ஐந்து வருடங்கள் நிறைவடைவதற்கு முன்பதாக அது தொடர்பாக புலிகள் அறிக்கையிடுவதற்கு முன்னர் அரசாங்கம் ஓர் ஆக்கபூர்வமான நடவடிக்கையை எடுக்கவேண்டும் எனக்கோரியிருந்தோம். யுத்த நிறுத்த உடன்படிக்கைக்குப் பின்னர் அல்லது உடன்படிக்கையின் மூலமாக தனி இராச்சியம், தனி இராணுவம், நீதி மன்றம் போன்றவற்றை ஏற்படுத்தி சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தியிருக்கிறோம். அந்தத் தனி இராச்சியத்தை சர்வதேச சமூகம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதே புலிகளின் இலக்காகும்.

புலிகளின் இலக்குகள் குறித்து அரசாங்கத்திற்கு எடுத்துரைத்து அந்த உடன்படிக்கையிலிருந்து உத்தியோகபூர்வமாக விலக வேண்டுமென்று கூறியிருந்தோம். எமது எதிர்வுகூறல் இன்று உண்மையாக்கப்பட்டுள்ளது என்பது மட்டும் தெட்டத் தெளிவாகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## மீண்டும் பரீட்சையினை நடத்துவதற்கு ஏற்பாடு

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விபுலானந்த இசை நடனக் கல்லூரிக்கு புதிய மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கென நடத்தப்பட்ட அனுமதி பரீட்சையில் தோற்ற முடியாது போன வட மாகாணத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு மீண்டுமொரு பரீட்சையை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக பதில் உபவேந்தர் கலாநிதி என்.பத்மநாதன் தெரிவித்தார். இதுவரை புதிய மாணவர் அனுமதியை தாமதிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ச-5)

# மக்களை பாதிக்காத வகையில் பிரதான வீதிகளை மூடுங்கள்!

## யாழ்.தளபதிக்கு நீதிவான் ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

இராணுவ வாகனப் போக்குவரத்திற்காக பிரதான வீதிகளை மூடும் போது பொதுமக்களின் அன்றாடத் தேவைகளையும் அரச ஊழியர்கள், பாடசாலை மாணவர்களை பாதிக்காத வகையிலும் செயற்படுமாறு யாழ். இராணுவத் தளபதிக்கு யாழ்.மாவட்ட நீதிவான் ஆலோசனை வழங்கியுள்ளார்.

பிரதான வீதிகள் நீண்ட நேரம் மூடப்பட்டிருப்பதால் பொதுமக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

இதனால் அவற்றைத் தவிர்க்கும் வகையில் மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் யாழ்.இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறிக்கு நீதிவான் இ.த.விக்னராஜா பணித்துள்ளார்.

இதேவேளை பிரதான வீதிகள் மூடப்படுவதால் அரச ஊழியர்கள் எதிர்நோக்கும் சௌகரியங்கள் தொடர்பாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் பொதுநிர்வாக அலுவல்கள் அமைச்சுக்கு எடுத்துரைத்துள்ளார்.

குறித்த அமைச்சு இதற்கான தமது நடவடிக்கைகளை மேற்கொள்வதாக யாழ்.அரச அதிபருக்கு உறுதியளித்துள்ளது. (ச-5)

# கடற்றொழிலாளர்கள் மீது கடற்படை தாக்குதல்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு கடற்பரப்பில் கடல் தொழிலாளர்கள் மீதான தாக்குதல்கள் தொடர்வதாக தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு கடற்பரப்பில் கடல் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கடல் தொழிலாளர்கள் மீது கடற்படையினர் தாக்குதல் நடத்தியதன் காரணமாக கடல் தொழிலாளர்கள் தமது வலைகளை கடலில் அறுத்தெறிந்து விட்டு கரை திரும்பியதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (ச-5)



வருசப் புலம் மகாமாரி அம்பாள்

மஹோற்சவம்

வேட்டையும் சப்பரமும் திருவிழா

01.03.2007 வியாழன்

வல்லமை கொண்டிடும் வருசப்புல மாரியே
வெல்லத் தமிழிலே வேண்டுவன வேண்டியே
மெல்லச் சுவைத்தோம் உன்பெயர் தனையே
சொல்லுக் கினியளே சுகந்தரு மாரியே
அல்லற் படும்நாம் ஆறுவது எப்போ
மல்லுக் கட்டிட முடியலை உன்னுடன்
மனமிரங் கியேதுணை தருவாய் மாரியே

ஒவ்வொரு நாளும் சிறிய நன்மைகளுக்காக ஆன்மாவை விற்பதைத் தவிர வேறு என்ன செய்கிறார்கள் மனிதர்கள்?
—பெர்னார்ட்ஷா

வலம்புரி

# இனப்போரை தூண்டும் சீனாவின் வியாபாரத் தந்திரம்

இலங்கை அரசு மேற்கொண்டு வரும் பயங்கரவாதத்திற்கு எதிரான போருக்கு சீனாவின் ஆதரவு இருக்குமென அந் நாடு அறிவித்துள்ளது.

சீனாவிற்கான விஜயமொன்றை மேற்கொண்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அங்கு சென்றுள்ளார். இதன்போதே இலங்கைக்கு உதவுவதாக சீன அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

இலங்கைக்கு சீனா உதவுவது பற்றி எதுவித பிரச்சினையும் இல்லை. ஆனால் பயங்கரவாதத்திற்கு எதிராக இலங்கை மேற்கொண்டுவரும் யுத்தத்திற்கு உதவுவதாக சீனா தெரிவித்திருப்பதே அதிர்ச்சியையும், ஆழ்ந்த கவலையையும் ஏற்படுத்துகின்றது.

ஏனெனில் இலங்கையில் நிலவுவது இனப்பிரச்சினை என்பது சகலரும் அறிந்த விடயமே. இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் விடயத்தில் உள்நாட்டு அரசியல் எல்லைகளுக்குள் நடந்த சமாதான முயற்சிகள் என்பதற்கு அப்பால், சர்வதேசத்தின் அனுசரணையுடனும் சமாதானப் பேச்சுக்கள் நடந்துள்ளன. இவை சீனாவுக்கு நன்கு தெரிந்திருக்கும்.

அதே நேரம் அரசும் விடுதலைப்புலிகளும் யுத்த நிறுத்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு ஐந்து வருடங்கள் நிறைவடைந்து விட்டன. இந் நிலையில் இலங்கை அரசு பயங்கரவாதத்திற்கு எதிராக மேற்கொண்டு வரும் யுத்தத்திற்கு உதவுவோம் என சீனா கூறியிருப்பது ஆச்சரியமானதே.

சமாதான முயற்சியை மீளவும் ஆரம்பியுங்கள் என இணைத் தலைமை நாடுகள் உட்பட அனைத்து அமைப்புக்களும் கோரி வருகின்ற போது இலங்கையில் நடப்பது பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என சீனா வர்ணித்திருப்பதற்குள் இருக்கக்கூடிய அர்த்தம், இலங்கையில் அமைதி முயற்சியை குலைத்து ஆயுத விற்பனையை வழங்குவதாகும்.

இலங்கையில் இடம் பெறும் யுத்தத்திற்கு ஆயுதம் வழங்கிய நாடுகளில் சீனாவுக்கு முக்கிய பங்கு உண்டு.

ஆயுத விற்பனை மூலம் லாபம் உழைப்பதைத் தவிர வேறு எதனையுமே கருத்தில் எடுப்பதில்லை என்ற நாடுகளின் வரிசையில் சீனாவும் இடம் பெற்றுள்ளது என்பதையே அந் நாட்டின் அறிவிப்பு வெளிக்காட்டுகிறது எனலாம்.

ஒரு நாட்டில் கடந்த 30 வருடங்களாக இனயுத்தம் நடந்துகொண்டிருக்கும்போது அங்கு பயங்கரவாதம் இருப்பதாக கூறுவது அறியாமையின் பாற்பட்டதாகும்.

'பயங்கரவாதம்' என்பதற்கு இதுவரை சரியானதும் நியாயமானதுமான வரவிலக்கணத்தை ஐ.நா.சபை முதற்கொண்டு யாருமே முன்வைக்க முடியவில்லை.

ஓர் இனத்திற்கு பயங்கரவாதமாகத் தெரியும் அமைப்பு; மற்றொரு இனத்திற்கு தேவையான அமைப்பாக இருக்கும்.

எனவே இது விடயத்தில் சீனாவுக்கு ஒரு தெளிவில்லை என்றே கூறவேண்டும். ஆக சீனாவிடம் இருப்பதெல்லாம் நாடுகளைக் குழப்பி ஆயுதங்களை விற்பனை செய்வது மட்டுமே ஆகும்.

# அதிகரிக்கும் பல்கலைக்கழக மாணவர்களின் உள்வீடுகளும் அதிகரிக்காத தமிழ் மாணவர்களுக்கான வாய்ப்புகளும்

*இது போன்ற பிரச்சினைகளில் சென்ற வருடங்களில் பெற்ற வெற்றிகளும், ஆயினும் பிரச்சினைகள் தொடர்வதற்கான காரணங்களும்.*

2004/2005 ஆம் கல்வியாண்டில் உள்ளீர்ப்பு குறைவு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு ஏற்றுக்கொள்ளப்பட்டு யாழ். மாவட்ட உள்ளீர்ப்புகள் மாற்றியமைக்கப்பட்டன.

2005/2006 கல்வியாண்டிலும் இவ்வாறான பிரச்சினை ஏற்பட்டு நீதிமன்றில் வழக்கும் தொடரப்பட்டது எனினும் இரசாயன பாட மீள் திருத்தத்தின் காரணமாக ஏற்பட்ட மாற்றங்கள் இப் பிரச்சினையுடன் கலந்து தவறாக விளங்கிக்கொள்ளப்பட்டமையால் வெற்றி பெற முடியவில்லை.

தரக்கணிப்பு அறிமுக காலம் முதல் இவ்வாறான பிரச்சினைகள் தமிழ் மாணவர்கள் எதிர்நோக்கிவரினும் தமிழ் கல்வியாளர் சமூகம் மற்றும் சகல தமிழ் மக்களும் இப் பிரச்சினை தொடர்பாக காட்டிய அக்கறையின் அளவு போதியதாக இருக்காமையாலும் இப் பிரச்சினை தொடர்பாக மக்களிடையே சரியாக தெளிவுபடுத்தப்படாமையாலும் இப் பாதிப்புக்கள் வருடாவருடம் அதிகரித்து வருகின்றன.

*சுட்டிக்காட்டப்படவேண்டிய மேலதிக தகவல்கள்;*

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதிக்கொள்கைகளிற்கேற்ப உயிரியல் பிரிவில் மருத்துவத்துறைக்கான அனுமதிகள், கணிதப்பிரிவில் பொறியியல் துறைக்கான அனுமதிகள் மட்டுமே தெளிவாக எதிர்வு கூறப்படக்கூடியவை.

அவற்றிலேயே பெரும் எண்ணிக்கையான புறக்கணிப்புகள் காணப்பட்டு பெருமளவு மாணவர்கள் பாதிக்கப்படும் நிலையில் உயிரியல் விஞ்ஞானம் போன்ற துறைகளிற்கான புறக்கணிப்புகளை கணிப்பிடவோ சுட்டிக்காட்டவோ முடியாதுள்ளது.

மேலும் மருத்துவத்துறையின் பொறியியல்துறையின் உள்ளீர்ப்புகளுடன் ஒப்பிடுகையில் உயிரியல் விஞ்ஞானம் போன்ற துறைகளிற்கான உள்ளீர்ப்புகள் மிகவும் அதிகம்.

குறைந்த உள்ளீர்ப்புடைய துறைகளிற்கே இவ்வளவு பெருமளவு புறக்கணிப்பு ஏற்படுகையில் கூடிய உள்ளீர்ப்புடைய துறைகளிற்கான புறக்கணிப்பு உயர்வானதாக இருக்குமென ஊகிக்கலாம்.

மேலும் மருத்துவத்துறை, பல்மருத்துவத்துறை போன்றவற்றிற்கு உண்மையிலேயே உள்ளீர்க்கப்படவேண்டிய மாணவர்கள் வேறு துறைகளில் உள்ளீர்க்கப்படும்போது அத் துறைகளிற்கு உண்மையிலேயே உள்ளீர்க்கப்படவேண்டிய மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியின்றி பாதிக்கப்படுகின்றனர்.

இவ்வாறாக இப் பாதிப்பு நூற்றுக்கணக்கான மாணவர்களின் உயர் கல்வியைப் பாதிக்கும் ஒன்றாக அமைகிறது.

02. *முன்னர் அறிமுகப்படுத்தப்பட்ட தரப்படுத்தல்*- மாவட்ட கோட்டா முறை முன்னைய காலங்களில் தமிழ் மாணவர்களை பெரிதும் பாதித்திருந்தது. ஆயினும் இன்று தமிழ் மாணவர்களின் கல்வித்தரம் பாதிக்கப்பட்டுள்ளதால் கோட்டா முறை தமிழ் மாணவர்களின் அனுமதிகளிற்கு வாய்ப்பாக அமைகிறது என்பது தமிழ் கல்விமான்களின் தவறான கண்ணோட்டமாக அமைகிறது. எனினும் 100%திறமை அடிப்படையில் யாழ்.மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்படின் அண்ணளவாக 57 மாணவர்கள் மருத்துவ பீடத்திற்கு தெரிவு செய்யப்படுவர்.

*எதிர்பார்ப்புகள்*

❖ இக் கட்டுரையில் காட்டப்பட்டுள்ள கணிப்புகளின் அடிப்படையில் புறக்கணிக்கப்பட்ட வாய்ப்புகள் யாழ்.மாவட்ட மாணவர்களுக்கு வழங்கப்படவேண்டும்.

❖ பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினரால் வெளியிடப்பட்ட 2006/2007கல்வியாண்டிற்கான பட்டப் பயில்நெறிகளிற்கான அனுமதிக்கான கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிக்கொள்கையில் ஏதேனும் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் அது தொடர்பாக தெளிவாக அறியத்தரப்பட வேண்டும்.

❖ வெளியிடப்பட்ட இசட் புள்ளிகளின் அடிப்படையில் யாழ்.மாவட்டத்தில் இருந்து 49 மாணவர்கள் மட்டுமே மருத்துவத்துறைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இத் தெரிவிற்கு காரணமாய் அமைந்த இசட் வெட்டுப்புள்ளி எவ்வாறு தீர்மானிக்கப்பட்டது என்பது தெளிவுப்படுத்தப்படவேண்டும்.

❖ எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாவண்ணம் தெளிவான நடைமுறைகள் பின்பற்றப்படுவது உறுதி செய்யப்படவேண்டும்.

*எதிர்கால செயற்பாடுகள்.*

01. *மேன்முறையீடு*- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களின்படி முதல் நடவடிக்கையாக இசட் வெட்டுப்புள்ளிகள் வெளியான நாளில் இருந்து 4 வாரங்களிற்குள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் மேன்முறையீடு செய்ய உள்ளோம்.

02. *பிரச்சினையை தெளிவுபடுத்தல்*- ஊடகங்கள் வாயிலாக கல்விமான்கள், கல்வியாளர்கள், புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள், ஏனைய சமூக அங்கத்தவர்கள் என யாவருக்கும் இப்பிரச்சினையை தெளிவுபடுத்தல்.

03. *கோரிக்கைகளிற்கு செவிசாய்க்கும் வண்ணம் அரசை வலியுறுத்தல்*- பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலமாகவும் யாழ். மாவட்ட கல்விமான்கள், சகல மக்கள் மூலமாகவும், பல்க லைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, கல்வி அமைச்சை கோரிக்கைகளிற்கு செவிசாய்க்கும் வண்ணம் வலியுறுத்தல்.

04. *கல்வியுரிமை மீறல்*- யாழ்.மாவட்ட மாண்வர்களின் கல்வியுரிமை பாதிக்கப்படுகின்றது என்ற அடிப்படையில் மனித உரிமை அமைப்புகளிடம் இப் பிரச்சினையை கொண்டு செல்லல்.

05. மின் அஞ்சல் (E-Mail) தொலைபேசி மூலமாகவும் வலியுறுத்தல்.

06. நீதிமன்றில் மேன்முறையீடு. (முற்றும்)

# இராஜதந்திரிகள் மீதான தாக்குதல் பதற்றத்தில் மட்டக்களப்பு மக்கள்

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற எறிகணை வீச்சுத் தாக்குதலில் இத்தாலி, ஜேர்மன், ஐக்கிய நாடுகள் அதிகாரிகள் உட்பட 10 பேர் காயமடைந்ததாகவும் அதனைத் தொடர்ந்து மட்டக்களப்பில் பதற்றம் நிலவுவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பேரனர்த்த நிவாரண மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்கவும் அமெரிக்க, யப்பான், ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, கனடா உட்பட 34 பிரதிநிதிகள் அடங்கிய குழுவும் இரு உலங்கு வானூர்திகளில் மட்டக்களப்பிற்குச் சென்றிருந்தனர்.

அண்மையில் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட வாகரைப் பிரதேசம் உட்பட கிழக்கு மாகாணத்தில் நடைபெறும் மனிதாபிமான அபிவிருத்திப் பணிகளை ஆராயும் நோக்குடன் இக் குழுவினரின் உலங்கு வானூர்தி தரையிறங்கிய போது வவுணதீவுப்பகுதியில் இருந்து மேற்கொள்ளப்பட்ட மோட்டார்த் தாக்குதல்களில் சிக்கியது.

இத் தாக்குதலைத் தொடர்ந்து மட்டக்களப்பில் உள்ள அனைத்துலக அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு பாதுகாப்பு எச்சரிக்கையை ஐக்கிய நாடுகள் சபையின் கொழும்பு அலுவலகம் விடுத்ததுடன் கிழக்கு மாகாணத்தையும் தவிர்க்கும்படி அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கிறது.

மேலும் இராஜதந்திரிகள் பயணம் நிறைவு பெறும் வரை மட்டக்களப்பின் நகருக்கு பொதுமக்கள் செல்வதை படையினர் முற்றாக தடைசெய்திருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இத் தாக்குதல் தொடர்பாக இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் தொர்பினூர் ஓமர்சன் தெரிவித்ததாவது;

விசாரணைகளை நாம் ஆரம்பித்திருக்கின்றோம். இராணுவ மற்றும் அதிரடிப்படையினரின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்துடன் நாம் தொடர்பு கொண்டுள்ளோம்.

இது ஒரு துரதிஷ்டவசமான நிகழ்வு. நாம் எமது விசாரணைகளை இன்னும் நிறைவு செய்யவில்லை எனவே எம்மால் எதுவும் கூற முடியாது. எந்தச் சந்தர்ப்பத்திலும் இரு தரப்புக்குமிடையில் நாம் தொடர்புகளை மேற்கொள்வதற்கு தயாராகவுள்ளோம் என்றார் அவர். (ச-3,5)

# எறிகணைத் தாக்குதலினால் மட்டு.மக்கள் இடம் பெயர்வு

இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் தொடரும் எறிகணை மோதல்களை அடுத்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்திலிருந்து மேலும் பல குடும்பங்கள் வெளியேறி நேற்று முன்தினமிரவும் நேற்றும் அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிகளை சென்றடைந்துள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப்புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட எறிகணைகள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வீழ்ந்து வெடித்ததில் வெளிநாட்டு தூதுவர்கள் உட்பட 14 பேர் காயமடைந்ததையடுத்து விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை நோக்கி இராணுவத்தினரால் பரவலாக தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த மோதல்களை அடுத்து நாவற்காடு, ஈச்சந்தீவு ,கரவெட்டி மற்றும் விளாவெட்டுவான் ஆகிய கிராமங்களிலிருந்து 350க்கும் அதிகமான குடும்பங்களைச் சேர்ந்த சுமார் ஆயிரத்து 400 பேர் வாவி வழியாகவும் தரை வழியாகவும் அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிகளை வந்தடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட எறிகணைகள் தமது குடியிருப்புக்களில் விழுந்து வெடிப்பதால்தான் தாம் இப்படி வெளியேற நேர்ந்ததாக இடம் பெயர்ந்த மக்கள் சிலர் தெரிவித்துள்ளனர். (ச-5)

# சீனா- இலங்கைக்கு இடையில் எட்டு ஒப்பந்தங்கள் கைச்சாத்து

(பீஜிங்)

ஏழு நாள் விஜயத்தை மேற்கொண்டு சீனா சென்றுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ தலைமையிலான குழுவுக்கும் சீன அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் 8 ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

இரண்டு நாட்டுப் பிரதிநிதிகளுக்கும் இடையே இடம்பெற்ற இராஜதந்திர மட்டத்திலான பேச்சுவார்த்தையடுத்து சீன ஜனாதிபதி பூஜிந்தாவா மற்றும் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சீன மற்றும் இலங்கை அமைச்சர்கள், அதிகாரிகள் அந்த ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளனர்.

சீனாவுக்கும் இலங்கைக்கும்இடையிலான வரலாற்றில் இரு நாடுகளுக்கும்இடையில் முதலாவது ஒப்பந்தம் 1952 ஆம் ஆண்டு டிசம்பர் 17 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

சீனா -இலங்கைக்கு இடையே றப்பர், அரிசி ஒப்பந்தமே அன்று கைச்சாத்திடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## பௌர்ணமி தின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம், மாதாந்த பௌர்ணமி தினத்தில் நடத்திவரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல், பன்னிருதிருமுறைப் பாராயணம் எதிர்வரும் மூன்றாம் திகதி காலை 8 மணிக்கு யாழ்.வண்ணை விசுவேசப் பிள்ளையார் ஆலயத்தில் ஆலயப் பரிபாலன சபையினரின் அனுசரணையுடன் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ச)

## பூநகரியை...

பகுதிகள்மீது படையினர் தொடர்ச்சியாக எறிகணை வீச்சுக்களை நடத்தியுள்ளனர்.

அதன் தொடர்ச்சியாக நேற்றும் பூநகரியை நோக்கி அகோரமான எறிகணை வீச்சு நடத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-5)

## மருவில்...

தேவாலயத்திலிருந்து ஆறு கிலோமீற்றர் தொலைவில் உள்ள பரப்புக் கடந்தான் பெரியவயலில் நேற்று முற்பகல் 10 மணியளவில் இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் 4 வயதுச் சிறுமியும் 15 வயதுச் சிறுவனும் அவர்களது பெற்றோரும் படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் உடனடியாக மன்னார் அடம்பன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மன்னாருக்கு அனைத்துலகச் செஞ்சிலுவைச் சங்கக் குழுவினரால் மேலதிக சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளனர். (ச-3,5)

## சந்தேகத்திற்...

விடுதலைப்புலிகளுக்கு ஆயுதம் கொண்டு சென்றதாகவும் கடற்படை தெரிவித்துள்ளது. இதேவேளை சம்பவம் இடம்பெற்ற இடத்தினை கடற்படையினர் சோதனையிட்ட போது சில மரப்பெட்டிகளில் அடைக்கப்பட்ட ஆட்லறி ஷெல்களை அவர்கள் மீட்டுள்ளனர்.

இதன்போது சுமார் 15 ற்கும் குறைவானவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் எனவும் கடற்படையினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ச-3,5)

## அதிரடிப்...

4 கைக் குண்டுகள், தயார் நிலையிலிருந்த கிளைமோர் ஒன்று, தூர நின்று இயக்கும் கருவி மற்றும் சயனைட் குப்பி உள்ளடங்கலாக பல் வேறு ஆயுதங்களை மீட்டுள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது. (ச-1,3)

## நுணாவில்...

அ.பிறேம்சங்கர், சடலத்தை பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு சாவகச்சேரிப் பொலிஸா ருக்கு உத்தரவிட்டார். (எ-5)

## தமிழீழ...

இருக்கின்றனர்.

முன்னாள் அமைச்சர்களான சிறிபதி மற்றும் மங்கள ஆகியோரை ஜனாதிபதி நீக்கியதும் ஜனாதிபதியின் சகோதரர்களுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே உள்ள தொடர்பினால்தான்.

சிறிபதி; பசில் ராஜபக்ஷ , மங்கள ,ரிரால் அலஸ் ஆகியோர் விடுதலைப்புலிகளுடன் ஜனாதிபதித் தேர்தலின்போது கலந்துரையாடியதாக முன்பு வதந்திகள் பரவியிருந்தன.

ஆனால் அது தற்போது தீவிரமான குற்றச்சாட்டாக மாறியுள்ளது. இதுதொடர்பாக அண்மையில் சிறிபதியும் ஒரு சிறப்பு அறிக்கையை வெளியிட்டிருந்தார்.

ஆனால் அந்த அறிக்கையை பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க மறுத்திருந்தார். எனினும் சுதந்திரக்கட்சிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தம் பிரதமருக்குத் தெரிந்திருக்காமல் இருந்திருக்கலாம் என சிறிபதி தெரிவித்தார் என்றார். (ச)

## மட்டக்களப்புத்...

அமெரிக்கத் தூதுவரின் இறுதி அறிக்கை இலங்கையின் இறைமையைப் பாதித்திருந்தது. எனவே அவரை இலங்கையின் உள்ளக அரசியல் விவகாரங்களில் தலையிட வேண்டாம் என பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தூதுவரின் அண்மைய அறிக்கை, அவர் விடுதலைப்புலிகளுக்கு ஊக்கத்தை அளிக்கின்றரோ என எண்ணத் தூண்டியுள்ளது. விடுதலைப்புலிகளின் தாக்குதல் அமெரிக்கத் தூதுவர் பிளேக்கின் கண்ணைத் திறந்திருக்கும் எனவும் விடுதலைப்புலிகளின் உண்மையான இயல்பைக் காட்டியிருக்கும் எனவும் நாம் நம்புகின்றோம்.

விடுதலைப்புலிகளின் எறிகணை வீச்சில் காயமடைந்த இராஜதந்திரிகளும் ஏனையோரும் விரைவாக குணமடைய நாம் பிரார்த்திக்கின்றோம் என அந்தஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## அரசாங்கமும் விடுதலைப்புலிகளும்...

தப்பட்ட விடயம் தொடர்பாகவே பாங் கி மூன் இக்கருத்தைத் தெரிவித்துள்ளார்.

அந்தத் தாக்குதலைக் கண்டித்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம், வெளிநாட்டுத் தூதுவர்களையும் அனைத்துலகத் தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகளையும் ஏற்றிச்செல்லப்பட்ட உலங்கு வானூர்தி மீதான தாக்குதலானது அனைத்துலக சமூகத்தின் உயிர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளமை வெளிப்படையாகத் தெரிகிறது எனவும் அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் உடனடியாக தாக்குதல்களை நிறுத்தி மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இராஜதந்திரிகள் மீதான தாக்குதலை அடுத்து ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப் பொறுப்பை வகிக்கும் ஜேர்மனி சார்பாக கருத்துரைத்திருக்கும் கொழும்புக்கான ஜேர்மனியத் தூதுவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இரு தரப்பினரும் பேச்சு மேசைக்குச் சென்று ஆக்கபூர்வமான யோசனைகளை முன்வைத்துப் பேச்சுக்களை முன்னெடுத்து இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார். (ச-5)

# ஒப்பந்தத்தை மாற்றி அமைப்பதன் மூலம்...

சிங்கப்பூரிலிருந்து வெளிவரும் தமிழ்முரசு நாளிதழுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

***கேள்வி:-*** அமைதி உடன்பாடு ஏற்பட்டு ஐந்தாண்டுகள் ஆகியிருக்கும் நிலையில் அமைதி உடன்பாட்டை நீங்கள் தொடர்ந்து மதிக்கப் போகின்றீர்களா அல்லது மீறப் போகின்றீர்களா?

***பதில்:-*** இந்த யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீறியதும் செயலிழக்கச் செய்ததும் அரசாங்கமே. தமிழீழ விடுதலைப்புலிகளையும் தமிழ் மக்களையும் பொறுத்தவரையில் இந்த உடன்பாடு என்பது பாரிய எதிர்பார்ப்புக்கும் நம்பிக்கைக்குரியதுமான ஆவணமாகவே இருந்தது. ஆனால் அரசு அதில் உள்ள விதிகள் அனைத்தையும் மீறி அதனைச் செயலிழக்கச் செய்திருக்கின்றது. அந்தவிதத்தில் இக் கேள்வியை அரசாங்கத்தை நோக்கி கேட்பது பொருத்தமாக இருக்கும் என நான் நினைக்கின்றேன்.

***கேள்வி:-*** இரு தரப்புமே ஒப்பந்தத்தை மீறியதுதான் வன்முறைகள் அதிகரிக்கக் காரணம் என்று நோர்வே கூறியிருக்கின்றது. இருதரப்பும் மீண்டும் அமைதியில் நாட்டம் காட்டினால் பேச்சுவார்த்தையை முன்னெடுக்கத் தயார் என்று நோர்வே கூறுகின்றது. நோர்வேக்கு நீங்கள் கூறும் பதில் என்ன?

***பதில்:-*** இரு தரப்பிலும் யுத்த நிறுத்த மீறல்கள் நடைபெற்றது உண்மைதான். ஆனால் அந்த மீறல்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து சீரானதொரு முறையில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படுவதற்காக விடுதலைப்புலிகள் எப்போதுமே அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்கள்.

ஆனால் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் உள்ள அடிப்படை விதிகள் அனைத்தையுமே தகர்த்தெறிந்து விட்டு இன்று அரசாங்கம் தமிழ்மக்கள் மீது படுகொலைகளையும் வன்முறைகளையும் யுத்த நிறுத்த உடன்பாட்டை முற்றாகச் சிதைக்கும் விதத்தில் நேரடி ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையும் எமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் அரச படைகள் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றன.

இதனால் ஆயிரக்கணக்கான மக்களைக் கொன்றும் பல இலட்சக் கணக்கான மக்களை அவர்களின் சொந்த வாழ்விடங்களிலிருந்து வெளியேற்றியும் பெரும் மனிதப் பேரவலத்தை நடத்தி வருகின்றது. இதுவே யுத்த நிறுத்த உடன்பாடு முற்றாகச் செயலிழக்கக் காரணமாகியது. இந்தப் பின்னணியை நோர்வே புரிந்து கொள்ளும் என்றே நம்புகின்றேன்.

அதுபோல ஒவ்வொரு முறையும் அமைதி முயற்சிகளின் இறுதிக் கட்டத்தில் சந்தர்ப்பத்தைப்பயன்படுத்திக் கொண்டு இராணுவ ரீதியான நடவடிக்கைகளைச் செய்திருக்கின்றனர்.

உதாரணமாக குடாநாட்டை இவர்கள் ஆக்கிரமித்த பின் 'ஜெயசிக்குறு' நடவடிக்கையின் பெரும் நிலப்பரப்பில் தொடர் வெற்றிகளினால் இராணுவத்தின் கைகள் ஓங்கியிருக்கின்றது என்று பிரசாரம் செய்தனர்.

ஈற்றில் அந்த இராணுவத்திற்கு நடந்த முடிபை நீங்கள் கடந்த கால வரலாற்றில் பார்க்கலாம்.அது போலத்தான் இப்போதும் ராஜபக்ஷவும் அதே பாணியில் செயற்படத் தொடங்கியிருக்கின்றார்.

இந்த யுத்த நிறுத்த உடன்பாட்டையும்' அமைதி முயற்சிகளையும் சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொண்டு அதனை விமர்சித்துக் கொண்டு செயலிழக்கச் செய்திருக்கின்றார்.

இதற்குத் தமிழ் மக்களும் தமிழீழ விடுதலைப் புலிகளும் எதிர்காலத்தில் சரியான பதிலை வழங்கும் போது உங்களுக்கு உண்மை நிலை புரியவரும்.

***கேள்வி:-*** வடக்கில் இராணுவம் படைகளைக் குவிப்பதாக செய்திகள் வெளிவருகின்றன. தென்மராட்சி தாக்கப்பட்டால் உங்களது பதில் தாக்குதல் எப்படியிருக்கும்? வாகரை போன்றதா?

***பதில்:-***இராணுவ நடவடிக்கைகள்பற்றியோ அல்லது அதனை முறியடிப்பது பற்றியோ அதனை நாம் முற்கூட்டியே எதிர்வு கூறுவதில்லை. அந்தந்த நடவடிக்கைகளை நாம் அவ்வப்போது எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு ஊடாகவே அதற்கான திருப்பங்களை ஏற்படுத்தியுள் ளோம்.

ஆகவே இராணுவத் தீர்மானங்களையும் நான் இப்போது குறிப்பிடுவது பொருத்தமில்லை என்றே நினைக்கின்றேன்.

***கேள்வி:-*** இவ்வளவு நாளும் இல்லாமல் இயக்கத்தைப் பற்றி தமிழ் நாட்டில் தொடர்ந்து செய்திகள் வருகின்றன. பிடிபடும் படகுகளும் ஆட்களும் உள்ளபடியே புலிகளைச் சேர்ந்தவைதானா? தமிழ் நாட்டிலிருந்து உங்களுக்கு வெடிமருந்துகளும் பொருள்களும் கடத்தப்படுகின்றனவா? இந்தச் செய்திகளில் உண்மையிருக்கின்றதா?இதன் பின்னணி என்ன?

***பதில்:-*** இங்கு இப்போது இலங்கை அரசு பொருளாதாரத் தடை விதித்திருக்கின்றது. எரிபொருள், மருந்துப் பொருள்கள், அத்தியாவசியப் பொருள்கள் என்பன தடுக்கப்பட்டு தடை செய்யப்பட்ட நிலையில் அயல் நாடான இந்தியாவிலிருந்து இப்படியான சில பொருள்களைக் கடத்துவதற்கு சில தனிப்பட்டவர்கள் முயலலாம்.

இதை எமது விடுதலை அமைப்பின் மீது குற்றஞ்சுமத்துவதற்காக பயன்படுத்தி எமது அமைப்பை களங்கப்படுத்தும் முயற்சிகளை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை.

நாம் இந்தியாவிலிருந்தோ, தமிழ்நாட்டிலிருந்தோ வெடிபொருள்களையும் ஆயுதங்களையும் கடத்த வேண்டிய தேவையில்லை. நாம் எமது மண்ணில் ஆக்கிரமித்திருக்கின்ற இராணுவத்துடன் போரிட்டு அவர்களிடமிருந்தே பெருமளவு இராணுவத் தளபாடங்களையும் ஆயுதங்களையும் கைப்பற்றுகின்ற வழமையைப் பேணி வருகின்றோம்.

அதனால் வெடிபொருள்களுக்கோ ஆயுதங்களுக்கோ எமக்குப் பெரியளவு தட்டுப்பாடுகள் ஏற்படுவதில்லை. இது திட்டமிட்டு தமிழ் நாட்டில் வாழுகின்ற எமது உறவுகள் மத்தியில் எமது விடுதலைப் போராட்டம் தொடர்பாக மக்களின் அவலங்கள் தொடர்பாக ஏற்பட்டிருக்கின்ற உணர்வலைகளை இல்லாது ஒழிப்பதற்காகவே மேற்கொள்ளப்படுகின்ற பொய்ப் பிரசார முயற்சியாகவே இதை நாம் பார்கின்றோம்.

***கேள்வி:-*** 2002 ஆம் ஆண்டு உடன்பாட்டைத் திருத்தம் செய்யலாம் என்று அமெரிக்கா சொல்லியிருப்பதற்கு உங்கள் கருத்து என்ன? அப்படித் திருத்தம் செய்வதானால் அதற்கு நீங்கள் அனுமதிப்பீர்களா?

***பதில்:-*** யுத்த நிறுத்த உடன்படிக்கை என்பது 20 வருடங்களுக்கு மேலாக நடைபெற்ற ஒரு உக்கிரமான போருக்கு தற்காலிகமான முடிபொன்றைக் கொண்டு வந்து தீர்வு காண வழியை ஏற்படுத்துகின்ற முயற்சியினால் வந்ததே.

முன்னைய அனைத்து உடன்பாடுகளுமே செயலிழந்து போன நிலையில் அனைத்துலக ஆதவுடனும் பெரும் வரவேற்புடனும் ஒத்துழைப்புடனும் நோர்வேத் தரப்பால் கொண்டு வரப்பட்ட உடன்பாடே இதுவாகும்.

தமிழ் மக்களினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாக இது இருக்கின்றது. இந்த உடன்பாட்டைத் திருத்துவது என்பதையோ மாற்றியமைப்பது என்பதையோ தமிழ் மக்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

அது மீண்டும் அமைதியைக் கொண்டு வர வழிகோலும் என்றும் நம்பவில்லை. இருக்கின்ற உடன்பாட்டை முழுமையாக அமுல்படுத்துவதே அமைதித் தீர்வுக்கான சரியான வழியைத் திறக்கும் என நான் நினைக்கின்றேன்.

***கேள்வி:-*** தலைவர் வேறு நாட்டுக்கு செல்லப் போகின்றார் என்று சொல் பவர்களுக்கு நீங்கள் சொல்லும் பதில் என்ன?

***பதில்:-*** தமிழீழ தேசியத் தலைவரைப் பொறுத்த வரையில், அவர் தன்னுடைய தாயகத்தையும் தனது மக்களையும் நம்பியே இந்த விடுதலை அமைப்பை ஆரம்பத்திலிருந்தே கட்டி வளர்த்து வந்திருக்கின்றார். எந்த நாடுகளினதோ அனைத்துலக உதவிகளையோ நம்பி இதனை அவர் ஆரம்பிக்கவில்லை; வளர்த்தெடுக்கவும் இல்லை.

முழுக்க முழுக்க தன்னிலும் தனது மக்களிலும் தன் தேசத்தின் மீதும் முழு நம்பிக்கையோடுதான் இந்த விடுதலை அமைப்பை பிரமாண்டமான பலமிக்கதாகக் கட்டிஎழுப்பியிருக்கின்றார். எப்போதும் எமது தேசியத் தலைவரோ எமது தளபதிகளோ போராளிகளோ எவருமே எமது தாயகத்தையும் எங்களுடைய மக்களையும் விட்டு அகழப்போவதில்லை.

மீன்களுக்கு கடலில் இருப்பது பலமானது போல காட்டுவிலங்குகளுக்கு காடே பலமிக்கதாக இருப்பது போல எமக்கும் எமது சொந்த மக்களுக்குள்ளேயே சொந்த மண்ணிலேயே இருப்பதுதான் பலமாகும்.

இந்த வலிமையை எந்த சக்தியாலும் முறியடிக்க முடியாது. அந்த விதத்தில் இது ஒரு தவறான கேள்வி என்றே நான் நினைக்கின்றேன். (ச-5)


Hatton National Bank

அடகுப் பொருட்கள் ஏல விற்பனைக்கான

அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி ஆகிய கிளைகளில் 30.11.2005 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத/காலாவதி திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளர்களின் அடகுப் பொருட்கள் 10.03.2007 சனிக்கிழமை அன்று இல.212, 214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்.கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

உங்களின் பெறுமதிமிக்க பொருட்களை உடனே மீட்க முடியாவிட்டால்,

★ கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒருபகுதியையும் (ரூ. 500) செலுத்தி, அல்லது

★ தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருட்களை மீள அடகு வைத்து, காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

(c-626) -முகாமையாளர்



மரண அறிவித்தல்

திருமதி சுப்பிரமணியம் அன்னபூரணம்

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வடலியடைப்பை வசிப்பிடமாகவும் தற்காலிகமாக பிரான்ஸினை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் அன்னபூரணம் (25.02.2007) ஞாயிற்றுக்கிழமை பிரான்ஸில் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், அமரர் நமசிவாயம், அமரர் அமுதலிங்கம், அன்னலட்சுமி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிதம்பரேஸ்வரி(நியூசிலாந்து), செல்வேஸ்வரி(யாழ்.), உதயநேசன்(கனடா), செல்வநேசன் (ஆசிரியர் கொழும்பு), ஆனந்தசொரூபி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தர்மலிங்கம், யோகேந்திரராஜா ,அன்னலக்சுமி, சுமதி (ஆசிரியை), அமுதராஜ் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 01.03.2007 வியாழக்கிழமை பிரான்ஸில் நடைபெறவுள்ளது. அன்று வடலியடைப்பு பிள்ளையார் வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இறுதி அஞ்சலி நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்

சு.தெய்வேந்திரம் (பெறாமகன்) தேநீர்க் கடை, சங்கானை, வடலியடைப்பு.

(637)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.03.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.